






# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

நாகர்கோவில் பதிப்பு.22.02.2026 . மலர் 04 . இதழ் 52. ஞாயிற்றுக்கிழமை

. NAGERCOIL EDITION .22.02.2026 . VOL 04 . ISSUE 52. SUNDAY . 4 PAGES .Rs.5







## “200 தொகுதிகளில் வெல்வது நிச்சயம்

# 200+ லட்சியம்!

## மதுரையில் முதல்வர் ஸ்டாலின் சூளுரை

மதுரை: பிப்.22-

“தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்வது நிச்சயம், 200க்கும் மேல் வெல்வது லட்சியம்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரை மாநாட்டில் பேசினார்.

‘மதுரையில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி’ என்ற தலைப்பில் தென் மண்டல திமுக வாக்குச்சாவடி முகவர்கள் குழு பயிற்சி மாநாடு நேற்று (பிப்.21) நடைபெற்றது. மாநாட்டை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியது: “மாநாட்டில் கூடியிருக்கும் வாக்குச்சாவடி முகவர்களை பார்க்கும்போது என் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

‘இனி எப்போதும் நாம்தான்’ என்ற நம்பிக்கையுடன் நான் இருப்பதற்கு காரணம் திமுகவின் வேர்களாக இருக்கும் நீங்கள்தான். வாக்குச்சாவடி குழுவினர் நியமனத்தை நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே தொடங்கிவிட்டோம்.

களப்பணியில் இருக்கும் முகவர்களுக்கான மண்டல அளவிலான பயிற்சி கூட்டங்களை நானே நேரில் சென்று நடத்தியுள்ளோம். அதனால்தான் நாடாளுமன்ற தேர்தலில் 40 இடங்களிலும் வெற்றி பெற்றோம். அடுத்து புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்காக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி இந்தியாவில் எந்த கட்சியும் செய்ய முடியாத ஒரு தனி செயலியை தொடங்கி, வீடு வீடாக சென்று 1.10 கோடி குடும்பங்களை உறுப்பினர்களாக சேர்த்தோம்.

அடுத்த பணி உடனடியாக வந்தது. அதுதான் எஸ்ஐஆர். எஸ்ஐஆரில் இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் யாருடைய வாக்குகளும் நீக்கவிடாமல் பம்பரமாக உழைத்த இயக்கம் திமுக. அடுத்து தேர்தலுக்கு தயாராக வாக்குச்சாவடி முகவர் குழுக்களை சந்தித்து வருகிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது இருக்கும் வாக்குச்சாவடி அடிப்படையில் தமிழகத்தில் 75,032 பிஎல்ஏக்கள் உள்ளனர். பிஎல்சிக்கள் 55,000 பேர், பிடிஏக்கள் 75,032 பேர் உள்ளனர். வரும் தேர்தல் களத்தில் வெற்றியை உறுதி செய்வது இவர்கள்தான்.

திருவிடந்தையில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் 1.30 லட்சத்துக்கும் அதிகமானோர், திருப்பத்தூரில் நடைபெற்ற மாநாட்டில் 1.26 லட்சம் பேர் பங்கேற்றனர். மதுரை மாநாட்டில் 1.56 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர். அடுத்து வரும் 27ம் தேதி கோவையில் மேற்கு மண்டல மாநாடு நடக்கவுள்ளது.

கடந்த 2 மாதத்தில் மட்டும் இளைஞரணி, மகளிரணி என 7 மாநாடுகள் நடத்தப்பட்டு 9.30 லட்சத்துக்கும் அதிகமானோரை சந்தித்து பேசியிருக்கிறேன். இதனால் சவால் விட்டு சொல்கிறேன். இந்த அளவுக்கு நம்மைப் போல் பூத் அளவில் நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர்கள் என இப்படி தேர்தலுக்கு ஆயத்தாகும் கட்சியை இந்தியாவில் யாராலும் காட்ட முடியாது.

திமுக மக்களிடம் இருந்து மக்களுக்காக உருவான இயக்கம். பெரியார், அண்ணா, கலைஞரின் ரத்தம். இந்த இயக்கத்தை தொட்டுப்பார்க்க வேண்டும், சீண்டி பார்க்க வேண்டும் என நினைத்தாலே தமிழ்நாடு பதிலடி கொடுக்கும் என்ற பயத்தால் எதிரிகள் அஞ்சி நடுங்குகின்றனர். திமுகவைப் போல் அமைப்பு ரீதியான வலுவான அரசியல் கட்சியை யாராலும் காட்ட முடியாது. இப்போது நாம் காட்டுவது எல்லாம் வெறும் டிரைலர் தான். திருச்சியில் மெயின் பிக்சர் காண்பிக்க தயாராகி வருகிறோம்.

திருச்சியில் மார்ச் 9ல் பத்து லட்சம் பேர் திரள்வார்கள். திருவண்ணாமலை தொடங்கி அடுத்த மாதம் திருச்சி மாநாடு வரை 3 மாதத்தில் 20 முதல் 25 லட்சம் பேரை சந்திக்க உள்ளேன். நாம் ரெக்கார்டு செய்தால், அது யாராலும் உடைக்க முடியாத ரெக்கார்டாக இருக்க வேண்டும். பெரிய மாநாடு மட்டும் அல்ல, ஒவ்வொரு நாளும் காலை, மாலை என பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறேன்.

எந்தப் பக்கம் திரும்பினாலும் கருப்பு சிவப்பு கொடிதான் தெரிகிறது. திமுக கொள்கைகள்தான் எல்லா இடங்களிலும் எதிரொலிக்கிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் உரக்கக் கேட்கிறது. இதுதான் கள நிலவரம். தெற்கு சீமையில் மொத்த தொகுதிகளிலும் திமுக கூட்டணிதான் வெற்றி பெற வேண்டும். அனைத்து தொகுதிகளையும் தட்டி தூக்க வேண்டும்.



திமுக கூட்டணி 2019 முதல் எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகிறது. 2024 எம்பி தேர்தலில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாதபடி முழுமையாக வெற்றிபெற்றோம். அப்போதை விட இப்போது அதிக திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். மக்கள் கேட்காத திட்டங்களையும் வழங்கி இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளோம். அனைத்து தரப்பினரின் கோரிக்கைகளையும் தீர்த்து வைத்துள்ளோம். இதனால் இந்த தேர்தலில் உங்கள் மூலம் மிகப் பெரிய வெற்றியை எதிர்பார்க்கிறோம்.

மக்களின் மகிழ்ச்சி, உடன்பிறப்புகள் மீது நம்பிக்கை வைத்து இதை சொல்கிறேன். நீங்கள் இருக்கும் போது எனக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்போம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அனைத்து பகுதிகளிலும், அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றோம் என்ற செய்திதான் மிக மிக முக்கியம். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். அதற்காகத்தான் இந்தக் கூட்டங்கள், மாநாடுகள்.

ஒவ்வோரு பூத்துக்கும் 350 வாக்குகள்தான் டார்க்கெட். இதை நிறைவேற்றினாலே 2.60 கோடி வாக்குகளை வாங்க முடியும். 2.50 கோடி வாக்குகளுக்கு குறையாமல் வாக்குகளை வாங்க வேண்டும். இதை வாங்கிக் காட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்களுக்கு தேவையானதை செய்து தருவது என் பொறுப்பு. ஆளுக்கு 40 அல்லது 50 வாக்குகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். இலக்கை நிறைவேற்றிவிடலாம். 200 தொகுதிகள் நிச்சயம், 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவது நம்முடைய லட்சியம். அடுத்த 2 மாதம் உங்களுக்கும், எனக்கும் ஓய்வில்லை. ஒவ்வொரு வாக்காளர்களையும் குறைந்தது 5 முறையாவது நேரில் சந்திக்க வேண்டும்.

என்னதான் வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் வந்தாலும் வீடு வீடாக படியேறி சென்று கையெடுத்து கும்பிட்டு வாக்குகள் கேட்பதற்கு ஈடாகாது. ஆன்லைன் செயல்பாடு முக்கியம்தான். அதை மறுக்கவில்லை. களத்தில் வேலை செய்தால்தான் மதிப்பு இருக்கும். பரம்பரை பரம்பரையாக திமுகவுக்கு வாக்களிக்கும் குடும்பமாக இருந்தாலும், இதுவரை வாக்களிக்காத குடும்பமாக இருந்தாலும் பிரச்சாரத்தின் கடைசி நிமிடம் வரை மக்களை சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

சாதனைகளை சொல்லி, வாக்குறுதிகளை சொல்லி ஓட்டு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இதை திரும்ப திரும்ப செய்தால் நமக்கு வெற்றியும் திரும்ப கிடைக்கும். வாக்காளர்கள் பூத்துக்கு வந்து வாக்களிக்கும் வரை ஓய்வே இருக்கக்கூடாது. பணிவாக, கனிவாக, மரியாதையாக, நட்பாக அணுக வேண்டும். மக்கள்தான் எஜமானர்கள். நாம் அவர்களின் சேவகர்கள். மக்களை சந்தித்து, அவர்களின் இன்ப, துன்பங்களின் போது கூடவே நிற்பதால்தான் அவர்களும் நம்முடன் நிற்கிறார்கள்.

75 ஆண்டுகளாக திமுக வலிமையாக நிற்க இதுதான் ரகசியம். வாக்குப்பதிவு முடிந்து சீல் வைத்து வண்டியில் ஏற்றும் வரையும், கடைசி வாக்கு எண்ணி முடிக்கும் வரை கவனமாக இருக்க வேண்டும். தேர்தல் தேதியை எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கட்டும். நாம் எப்போதோ பரப்புரையை தொடங்கிவிட்டோம்.

ஸ்டாலின் மகளிர் படை மூலம் அரசின் சாதனைகளை வீடு வீடாக கொண்டுச் செல்ல சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தேர்தலை காரணமாக வைத்து மகளிர் உரிமை தொகையை முடக்க நினைத்த சதியை முறியடித்து மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கியதையும், அடுத்து வரும் ஆட்சியில் ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்க இருப்பதையும் வீடு வீடாக சொல்ல கூறியிருக்கிறேன்.

திரவிட மாடல் ஆட்சியில் பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என சமூகத்தில் அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். அதனால் தமிழகம் வரலாறு காணாத வளர்ச்சி பெற்றுள்ளது. இது எதிரிகளின் கண்களை உறுத்துகிறது. இந்த ஆட்சி தொடர்ந்தால் தான் மகளிர் உரிமை தொகை போன்ற சமூக வளர்ச்சித் திட்டங்கள் தொடரும் என்பதை மக்களை உணர வைக்க வேண்டும்.

அண்மையில் மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கியதை சர்ஜிக்கல் ஸ்டிரைக் என்றனர். அந்தளவு எதிரிகள் கணிக்க முடியாதபடி நம் செயல்பாடுகள் இருந்தது. மத்திய அரசு மீது இருக்கும் பயத்தால் ரூ.5 ஆயிரத்தை உடனடியாக எடுக்க பெண்கள் வங்கிகளுக்கு படையெடுத்தனர். மக்களுக்கு பணம் கொடுத்தால் அது திமுக அரசு, பணத்தை பறித்தால் பாஜக அரசு. இதை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இலவச பேருந்து திட்டத்தால் மெட்ரோ ரயில் பயணிகள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக பிரதமர் மோடி பேசிய பழைய வீடியோ வைரலாகி வருகிறது. திமுக அரசின் மகளிர் இலவச பேருந்து பயணத்தால் ஒவ்வொரு பெண்களும் மாதம் ரூ.800 வரை சேமிக்கின்றனர். இது பிரதமருக்கு வலிக்கிறது.

பிரதமர் மோடி மார்ச் 1ல் மதுரை வருகிறார். அவரிடம் மதுரை, கோவைக்கு ஏன் மெட்ரோ ரயில் வரவில்லை? தமிழகத்துக்கு ஏன் எந்த சிறப்பு திட்டமும் தரவில்லை? கீழடி அறிக்கையை ஏன் வெளியிடவில்லை? எய்ம்ஸ் ஏன் வரவில்லை? நீட் விலக்கு ஏன் தரவில்லை? கல்வி நிதியை முடக்குவது நியாயமா என மக்கள் கேட்க வேண்டும்.

நியாயமாக எதிர்கட்சித் தலைவர் பழனிச்சாமி, தமிழ்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கோரிக்கையாக கூட கேட்க துணிச்சல் இல்லாத துரோகியாக மாறிவிட்டார். பழனிச்சாமி போல் பயந்தாகொள்ளி இல்லை நான். ஆட்சி, பதவி இல்லை, உயிரே போனாலும் கவலைப்படமாட்டோம். வழக்கு போட்டால் போடு, நாங்கள் பார்க்காத மிசாவா, தடாவா?

இந்தியாவில் இருக்கும் எதிர்கட்சிகளில் திமுக மீது தான் பாஜக அதிகளவில் ரெய்டு நடத்தியது. நம் அமைச்சர்களுக்கு அதிகளவில் அழுத்தம் கொடுக்கிறார்கள். ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்த பார்க்கிறார்கள். எமர்ஜென்சியை பார்த்த இயக்கம் திமுக. சிபிஐ, ஈ.டி, ஐடி என எந்த சித்து விளையாட்டுகளுக்கும் அஞ்சமாட்டோம். அதற்கு வேறு ஆளை பாருங்கள். என்ன ஆனாலும் ஒரு கை பார்ப்போம். எழுந்து நிற்போம்.

தமிழ்நாட்டின் உரிமைக்காக போராடுவதால் மக்கள் ஆதரவு அளிக்கின்றனர். அதனால் எல்லா தேர்தல்களிலும் ஜெயிக்கிறோம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அதை புத்தகமாக அளித்துள்ளோம். அதை மக்களிடம் அளித்து வாக்கு சேகரியுங்கள்.

இந்தியாவில் எந்த மாநிலமும் எட்ட முடியாத வளர்ச்சியை பெற்றுள்ளோம். சாதனை செய்யாத நாளே கிடையாது. தினமும் ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். எனக்கே நினைவில் வைக்க முடியாத அளவில் சாதனைகள் மறந்துவிடுகிறது. இதனால் சாதனைகளை தெரிந்து கொண்டு மக்களிடம் நினைவுபடுத்துங்கள்.

தேர்தல் பணியில் நாம்தான் முன்னணியில் உள்ளோம். கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகின்றன. தொகுதி பங்கீடு பேச குழு அமைக்கப்பட்டுள்ளது. யாருக்கு எந்த தொகுதி, யார் வேட்பாளர்கள் என்பதை தலைமை கழகம் பார்த்துக்கொள்ளும். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற வைக்க வேண்டியது உங்களின் கடமை. நம் கட்சி வேட்பாளர் மட்டும் அல்ல, கூட்டணி கட்சியின் வேட்பாளர்களையும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க கடுமையாக உழைக்க வேண்டும். நம் களப்பணியை பார்த்து கூட்டணி கட்சியினர் வியக்க வேண்டும்.

தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என கேள்வி எழுப்புங்கள். தமிழ்நாடு ஜெயிக்க வேண்டும் என்றால் திமுக கூட்டணி ஜெயிக்க வேண்டும். அடிமை அதிமுகவும், தமிழ் விரோத பாஜகவும் அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் இழக்க வேண்டும். நான் மீண்டும் முதல்வராக வர வேண்டும். தமிழ்நாடு எல்லா துறைகளிலும் தொடர்ந்து முன்னணியில் இருக்க வேண்டும்.

இந்தி திணிப்பை எதிர்க்க, மாநில சுயாட்சியை நிலைநாட்ட, மக்கள் நலத்திட்டங்கள் தொடர, தமிழ்நாடு எப்போதும் அமைதியான மாநிலமாக இருக்க, தமிழ்நாட்டின் வளர்ச்சி பயணம் தொடர, எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க, தமிழ்நாட்டின் சுயமரியாதையை காத்திட, தமிழ்நாடு தலைகுனியாமல் இருக்க, பாசிச பாஜகவை வெல்ல, அடிமை அதிமுகவுக்கு பாடம் கற்பிக்க, இந்தியாகவிற்கே தமிழ்நாடு வழிகாட்ட எல்லோரும் சொல்வோம் வெல்வோம் ஒன்றாக” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## டெல்லி செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்த சதி’ : உளவுத் துறை எச்சரிக்கை

புது டெல்லி, பிப்.22-

தலைநகர் டெல்லியில் செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. சாந்தினி சௌக் பகுதியில் உள்ள ஒரு கோயிலை பயங்கரவாதிகள் குறிவைக்கலாம் எனவும் உளவுத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



செங்கோட்டையை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் சாந்தினி சௌக்கின் சில பகுதிகள் உட்பட முக்கிய கோயில்கள் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர் இ தொய்பா (LeT) கண்காணிப்பில் இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவிக்கின்றன. சாந்தினி சௌக்கில் உள்ள ஒரு கோயிலை இலக்காகக் கொண்டு, அந்த பயங்கரவாத அமைப்பு வெடிகுண்டு தாக்குதலை திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பிப்ரவரி 6ம் தேதி நடந்த குண்டுவெடிப்புக்குப் பழிவாங்க லஷ்கர்இதொய்பா முயற்சிப்பதாகவும், இந்தியாவில் ஒரு பெரிய தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய கோயில்கள் லஷ்கர் இ தொய்பாவின் கண்காணிப்பில் உள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் 10 அன்று டெல்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகில் நடந்த ஒரு பயங்கரமான கார் குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண் 1க்கு அருகில் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கார் வெடித்ததில் அருகிலுள்ள பல வாகனங்கள் வெடித்து சிதறின.

## அமித் ஷா பற்றி அவதூறு பேச்சு: ராகுல் காந்தி வாக்குமூலம் பதிவு

புதுடெல்லி, பிப்.22-

கடந்த 2018 கர்நாடக சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, பாஜக தேசிய தலைவராக இருந்த அமித் ஷாவை ராகுல் காந்தி விமர்சனம் செய்தார்.

“பாஜக தூய்மையான அரசியலை நம்புவதாக கூறினாலும், கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அக்கட்சியின் தலைவராக உள்ளார்” என சாடினார்.

சொராபுதீன் ஷேக் போலி என்கவுன்ட்டர் வழக்கின் அடிப்படையில் ராகுல் இதை கூறியிருந்தார். ஆனால் 2014ம் ஆண்டிலேயே அவ்வழக்கில் இருந்து அமித் ஷா விடுவிக்கப்பட்டிருந்ததால் ராகுலுக்கு எதிராக உ.பி. சுல்தான்பூர் நீதிமன்றத்தில் உள்ளூர் பாஜக தலைவர் விஜய் மிஸ்ரா அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கில் ராகுல் 2024 பிப்ரவரியில் சரண் அடைந்து ஜாமீன் பெற்றார். 2024 ஜூலையில் ஆஜராகி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார். இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணையை தொடர்ந்து, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313ன் கீழ் நேரில் விசாரணைக்கு ஆஜராக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் ராகுல் நேற்று சுல்தான்பூர் நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் தொடர்பாக தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதன்பின் நீதிமன்ற வளாகத்தை விட்டு ராகுல் வெளியேறினார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 9ம் தேதி நடைபெற உள்ளது.

## குமரிக்கு முதலமைச்சர் வருகை கலெக்டர், அமைச்சர் கலந்தாய்வு கூட்டம்



நாகர்கோவில், பிப்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் , மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, ஆகியோர் விழா நடைபெறவுள்ள நாகர்கோவில் கன்கார்டியா பள்ளி மைதானத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் நடைபெற்ற துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவிக்கையில்

கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நினைவு வளைவினை திறந்து வைப்பதோடு புத்தளம் கல்லடிவிளையில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் படைப்பகத்தினையும் திறந்து வைக்க உள்ளார்கள். மேலும் பொன்னப்ப நாடார் திருவுருவச் சிலை திறந்து வைக்க உள்ளார். .

தொடர்ந்து 25.02.2026 அன்று நாகர்கோவில் கன்கார்டியா மைதானத்தில் நடைபெறும் விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள், மற்றும் நமது மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று முடிவுற்ற வளர்ச்சி திட்ட பணிகளை பயன்பாட்டிற்கு கொண்டு வர உள்ளார்கள். மேலும் நமது மாவட்டத்திற்கு புதிய வளர்ச்சி திட்ட பணிகளையும் துவக்கி வைக்க உள்ளார். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் ரூ 101 லட்சம் மதிப்பீட்டில் ராமநாதபுரம் மருதூர் சமுதாய கூடத்திற்கு புனரமைப்பு திருமண மண்டபம் திறப்பு விழா கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப ராஜ்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.உடன் மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன்,மாநகராட்சி, ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், துணை ஆணையாளர் குமரேசன், சுல்தானா, தலைமை பொறியாளர் விஜயகுமார், மத்திய மண்டல தலைவர் மீனா லோகு, மத்திய மண்டல உதவி ஆணையர், நித்யா,63 வது மாமன்ற உறுப்பினர் சாந்தி முருகன்,திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

## ராமநாதபுரம் மாவட்ட இறகுப்பந்து கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு




ராமநாதபுரம் , பிப் .22-

ராமநாதபுரம் மாவட்ட இறகுப்பந்து கழகத்தின் பொதுக்குழு கூட்டம் இராமநாதபுரம் மன்னர் சங்கத்தின் புரவலர் கேபிஎம் நாகேந்திர சேதுபதி தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகளாக ராமநாதபுரம் மாவட்ட இறகுப்பந்து கழகத்தின் தலைவராக முனைவர் ராஜசேகர் , செயலாளராக ராமமூர்த்தி மற்றும் பொருளாளராக முனைவர் சசிக்குமார் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டனர். மூத்த துணைத் தலைவர்கள் கௌரவ தலைவர் பிரபாகரன் அசோக் குமார், சசிக்குமார், துணைத் தலைவர்கள் , தொண்டி சாதிக்பாட்ஷா, . லிங்கம், மரியா ஜோசப் , போஸ்கோ நாகநாத துரை, மற்றும் கணேஷ் மூர்த்தி இணைச் செயலாளர்கள் ரமேஷ்பாபு மற்றும் வள்ளல், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் சிவராமகிருஷ்ணன், சங்க செயற்குழு உறுப்பினர்களாக தொண்டி பெரியசாமி அன்வர் ராஜா விஜயகாந்த், தியாகு, அமீனுதீன், ராஜ வேலவன், மற்றும் கல்யாண் குமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றுக்கொண்டனர்.இந்த பொதுக்குழு கூட்டத்தின் வரவேற்பு உரையை தலைவர் முனைவர் ராஜசேகர் ஆற்றினார். செயலாளர் ராமமூர்த்தி, கௌரவத் தலைவர் பிரபாகரன், துணை தலைவர் சாதிக் பாட்ஷா மற்றும் பெரியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சங்கத்தின் பொருளாளர் சசிகுமார் நன்றி கூறினார்.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் தமுக்கம் ல் தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள “நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ. தளபதி, திரு. அ. வெங்கடேசன், திரு.எம். பூமிநாதன், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர்.ஆர்.செல்வராஜ்.இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

## நாகர்கோவிலில் 1 .360 கிலோ கஞ்சா பறிமுதல் 2 இருசக்கர வாகனங்கள், 3 பேர் கைது



நாகர்கோவில், பிப்.22-

குமரி மாவட்டத்தில் கஞ்சா,குட்கா,புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் மிகடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் சுற்று வட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் 1 கிலோ 360 கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் 2 இரண்டு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதில் சாமிதோப்பு பகுதியை சேர்ந்த கணபதி என்பவரது மகன் தனுஷ் கிருஷ்ணா (22), பீச் ரோடு பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவரது மகன் விஷால் (18) மற்றும் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ராஜேஷ் சவுகான் ஆகியோரிடம் இருந்து 1 கிலோ 360 கிராம் கஞ்சா மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டனர்.

## திருத்துவபுரம் தேசிய நெடுஞ்சாலையில் ஆபத்தான நிலையில் மரம் அகற்ற கோரிக்கை



களியக்காவிளை, பிப்..22-

களியக்காவிளை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையையொட்டி பொதுப்பணித் துறைக்கு சொந்தமான சுமார் நூறு ஆண்டுகள் பழமையான புளிய மரம் உள்ளது. இந்த புளிய மரம் இலைகள் அனைத்தும் உதிர்த்த நிலையில் காட்சி அளிக்கிறது. புளிய மரத்தின் அடிப்பகுதி சிதிலரித்து, மரம் இத்து போய் உள்ளது. ஆகவே எப்போது வேண்டுமானாலும் சரிந்து விழுந்து ஆபத்தை ஏற்படுத்தும் என அப்பகுதியினர் அஞ்சுகின்றனர்.

இந்த புளிய மரத்தின் அருகில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான டிரான்ஸ்பர்மர் உள்ளது. இதில் புளிய மரம் சரிந்து விழுந்தால் விபத்து ஏற்படும். மேலும் தேசிய நெடுஞ்சாலையையொட்டி புளிய மரம் உள்ளது. ஆகவே வாகனங்கள் மீது புளிய மரம் விழுந்து விபத்தை ஏற்படுத்தலாம் எனவும் பொதுமக்கள் அஞ்சுகின்றனர். மேலும் இந்த புளிய மரத்தில் அருகில் தனியார் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் கல்வி கற்க வரும் மாணவர்கள் இந்த புளிய மரத்தின் பக்கமாக நடந்து செல்கின்றனர். ஆகவே விபத்தை ஏற்படுத்த காத்து நிற்கும் பழமையான புளிய மரத்தை சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகள் அப்புறப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர் சதீஷ் என்பவர் வலியுறுத்தியுள்ளார்.

## நாகர்கோவில் மேற்கு மாநகர பாரதிய ஜனதா கட்சி விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு புதிய நிர்வாகிகள் அறிவிப்பு



நல்லூர்: பிப். 22-

பா.ஜ.க கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தலைவர் கோபகுமார்,நாகர்கோவில் மேற்கு மாநகர தலைவர் சதீஷ் மற்றும் நாகர்கோவில் மேற்கு மாநகர் விளையாட்டு மட்டும் திறன் மேம்பாட்டு பிரிவு அமைப்பாளர் செர்ஜின் ஆகியோரின் ஒப்புதலுடன் நாகர்கோவில் மேற்கு மாநகர பாரதிய ஜனதா கட்சி விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்.அதன்படி துணைத் தலைவராக விநாயகம்,செயலாளர்களாக கார்த்திக், அனீஸ், அபின், சுஜின், மனோஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.கட்சியின் அனைத்து பொறுப்பாளர்களும், தொண்டர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று நாகர்கோவில் மேற்கு மாநகர பா.ஜ.க விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## கன்னியாகுமரியில் ரூ10 லட்சத்தில் மீனவர் ஒய்வு அறை விஜய்வசந்த் எம். பி அடிக்கல் நாட்டினார்



கன்னியாகுமரி, பிப்.22-

கன்னியாகுமரி சகாய நகர் பகுதியில் உள்ள வாடி தெருவில் மீனவ மக்கள் வலை பின்னும் மீனவர் ஒய்வு கூடம் கட்டி தர வேண்டும் என பொதுமக்கள் குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்

மீனவர்களின் கோரிக்கையினை ஏற்று மீனவர் ஓய்வு கூடம் கட்டுவதற்கு பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10. லட்சம் நிதி ஒதிக்கீடு செய்து நேற்று 21ம் தேதி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த். அடிக்கல் நாட்டினார். கன்னியாகுமரி பங்கு அருட்பணியாளர் உபால்டு அர்ச்சிப்பு செய்தார்.

நிகழ்ச்சியில் மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் நவீன்குமார், மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன், வட்டார தலைவர் சாம் சுரேஸ், மாநில மீனவர் அணி பொதுசெயலாளர் ஜவகர், மீனவர் காங்கிரஸ் மாநில செயலாளர் பாஸ்டின், நகராட்சி துணைத் தலைவர் கவுன்சிலர் ஜனஸ்மைக்கேல், மாவட்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் தாமஸ்,

மாவட்ட துணைத் தலைவர் மணக்குடி லாரன்ஸ் மாநில விளையாட்டுத் துறை கிழக்கு மாவட்ட தலைவர் அருண், மீனவரணி நிர்வாகிகள் ஜேம்ஸ் வர்மா, நெப்போலியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளம் அருகே சமுதாய நலக்கூட கட்டிடத்தினை மக்களின் பயன்பாட்டிற்காக கனிமொழி எம்.பி திறந்து வைத்தார்



விளாத்திகுளம் பிப். 22-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிவஞானபுரம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய்.20 லச்சம் மதிப்பீட்டில் கட்டபட்டுள்ள சமுதாய நலக்கூட கட்டினத்தினையும், சக்கம்மாள்புரம் ஊராட்சி பொம்மையாபுரம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய்.46.68 லச்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கட்டிடத்தினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார்.

இந்நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் தலைமை வகித்து கலந்து கொண்டார். மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரஞ்சித்,தங்கவேல், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன்,விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல்,கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, மாவட்ட பிரதிநிதிகள் புதுராஜா,முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நடராஜன் உள்ளிட்ட கிளைச் செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பிறி கணினி திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ. தளபதி, திரு. அ. வெங்கடேசன், திரு.எம். பூமிநாதன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரஜேந்திர நவநீத், இ.ஆ.ப, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார், இ.ஆ.ப., ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் வானதி, கல்லூரி கல்வி இணை இயக்குநர் (மதுரை மண்டலம்) முனைவர் வெ. கலைச்செல்வி, மிசிஜி அகாடமி முதன்மை செயல் அலுவலர் திரு. வி. ஸ்ரீகாந்த், பிறி இந்தியா சேல்ஸ் நிறுவனத்தின் தெற்கு மண்டல விற்பனைத் தலைவர் திரு. ஜி. சந்திரமௌலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**



**ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற 2025 26 ஆம் ஆண்டு இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றம் ஆகிய போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இதில் முதன்மைக்கல்வி அலுவலர் மான்விழி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர் .**

# சமத்துவ மக்கள் கழக நிர்வாகிகள் கூட்டம்



சென்னை, பிப்.22-
சமத்துவ மக்கள் கழக மாநில மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவர் எர்ணாவூர் ஏ. நாராயணன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளர் தங்கமுத்து, மாநில இளைஞரணி செயலாளார் கார்த்திக், பொருளாளர் கண்ணன், துணைச் செயலாளர்கள் பிரபு, விநாயகமூர்த்தி ஆகியோர் முன்னிலை வைத்தனர் . பொதுச்செயலாளர் சூலூர் சந்திரசேகர் தீர்மானகளை வசித்தார் . அனைத்து நிர்வாகிகளும் ஒருமனதாக தீர்மானங்களை ஏற்றுக் கொண்டனர் . இந்நிகழ்ச்சியில் துணைத்தலைவர் நிப்பான் தனுஷ்கோடி , கொள்கை பரப்புச்செயலாளர் முனீஸ்வரன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் விஸ்வநாதன், வர்த்தக அணி செயலாளர் சுப்பையா, தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட், மற்றும் தமிழக முழுதும் உள்ள மாவட்ட செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் . சென்னை மாவட்டச் செயலாளர் துரைமாணிக்கம் நன்றியுரை ஆற்றினார்.

# சென்னை சேத்துப்பட்டு எம்.சி.சி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில்" மெகா விமான கண்காட்சி". அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு



சென்னை, பிப் 22-
"கனவுகளை பறக்க விடுங்கள் இறக்கைகளை உருவாக்குங்கள்" என்ற தலைப்பில் தொடங்கிய இந்நிகழ்வில் 10 கூட்டுக் குழுக்களாக பிரிக்கப்பட்ட 72 மாணவர்கள் பங்கேற்றனர். பயிற்சி பெற்ற நிபுணர்கள் வழிகாட்டுதலின் கீழ் இந்த வளரும் தொழில்நுட்ப வல்லுநர்கள் தயாரித்த விமான கண்காட்சியில் செயல் படுத்தப்பட்டது.

மேலும் கோட்பாடு அறிவியலுக்கும் நடைமுறை பயன்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியை குறைக்கும் வகையில் இந்த பாட திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. முதல் நாள் அடிப்படை பயிற்சி மாணவர்கள் அறிமுகப் படுத்தப்பட்டு உடற்பகுதி இறக்கைகள் மற்றும் வால்கள் உள்ளிட்ட முக்கியஉறுப்பு கூறுகளை உருவாக்குதல் தொடங்கின, 2ம்நாள் மின்னணுவியல்-அசம்பிள் குழுக்கள் மின்னணு கூறுகள் வழி செலுத்தல் பெடல்கள் மற்றும் புஷ்ராடுகளை அவற்றின் கட்டமைப்பினை ஒருங்கிணைத்தனர். மேலும் 3ம் நாள் சோதனையில் இறுதித் தர மதிப்பீடு மற்றும் செயல்திறன் மதிப்பீட்டை உள்ளடக்கிய நிகழ்வில் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களுடன் இணைந்து

விமானங்களை பறக்கவிட்டார்.

இந்த நிகழ்ச்சியினை புரொப்பேலர் தொழில்நுட்பங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தனியார் நிறுவனம் மற்றும் சேத்துப்பட்டு எம் .சி .சி பள்ளி இணைந்து செயலாற்றியது குறிப்பிடத்தக்கது.

மேலும் பள்ளியின் தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர் ஜெபதாஸ் தினகரன்உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் மாதிரி விமான கண்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# இலங்கை சிறையில் வாடும் மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி மீனவர்கள் ஆர்பாட்டம்



இராமேஸ்வரம்.பிப்.22-
இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் மீனவர்களின் உறவினர்கள் பெண்கள் கை குழந்தைகளுடன் 100க்கும் மேற்பட்டோர் தங்கச்சிமடத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தின் போது ஒரு பெண் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட மீனவர் சங்க செயலாளர் வி.பி.சேசுராஜ் தலைமை வகித்தார்.ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 18ம் தேதி மீன் பிடிக்க சென்ற ராமேஸ்வரம் 3 விசைப்படகு மற்றும் 18 மீனவர்கள் அதே போல மண்டபம் பகுதியை சேர்ந்த 1 விசைப்படகு 4 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கோரி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர், இதனை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்,

மேலும் தொடர்ச்சியாக தமிழக மீனவர்களை கைது செய்வது படகுகளை அரசுடமையாக்குவது சம்பவங்கள் தொடர்கதை ஆகி வருகிறதாலும் அதே போல கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியை சேர்ந்த நான்கு விசைப்படகையும் 22 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் தங்கச்சி மடம் வலசை தெருவில் மீனவர் குடும்பத்தினர், பெண்கள் கை குழந்தைகளுடனும், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், மற்றும் பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர், மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை இட்டு வருகின்றனர், மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி வரும் போது மீனவ பெண் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த வேலைநிறுத்தம் மற்றும் போராட்டம் காரணமாக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் சுமார் 700 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லாமல் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மீனவர்கள் வேலை நிறுத்தம் காரணமாக நேரடியாக 5000 மீனவர்களும் அதேபோல சார்பு தொழிலாளர்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களும் வேலை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

# சிம்ஸ் மருத்துவமனையின் இந்தியாவின் முதல் தூக்கவியல் மையத்தை ஐஸ்வர்யா ராஜேஷ் தொடங்கிவைத்தார்




சென்னை, பிப் 22-
தூக்கக் கோளாறுகளுக்குத் தீர்வு காணும் வகையில், இந்தியாவின் முதல் 'ஒருங்கிணைந்த தூக்கவியல் மையத்தை' சென்னை சிம்ஸ் மருத்துவமனை தொடங்கியுள்ளது. தூக்கம் சார்ந்த பிரச்சனைகளுக்கு சிகிச்சை பெற நோயாளிகள் பல்வேறு இடங்களுக்கு அலைவதைத் தவிர்க்கும் வகையில், 10 மருத்துவத் துறைகளை ஒருங்கிணைத்து இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைவருக்கும் நரம்பியல், உளவியல் மற்றும் சுவாசம் சார்ந்த தூக்கக் கோளாறுகளுக்குச் சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த மையத்தை நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார். இவர் சமீபத்தில் " டியர் "என்ற தமிழ் திரைப் படத்தில், குறட்டையால் புதுமண தம்பதியினரிடையே ஏற்படும் சிக்கல்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் மையப்படுத்திய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

எஸ்.ஆர்.எம் குழுமத்தின் தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து இத்திறப்பு விழா நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் பங்கேற்றார்.

உறங்கும் நேரத்தில் மாரடைப்பு, இதயச் செயலிழப்பு பாதிப்புகள் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றை விளைவிக்கக்கூடிய தூக்கத்துடன் தொடர்புடைய கோளாறுகளுக்கு இந்த தூக்கவியல் சிகிச்சை மையம் சிறப்பு சிகிச்சையை வழங்குகிறது. காதுமூக்குதொண்டை நிபுணர்கள், நுரையீரல் நிபுணர்கள், நரம்பியல் நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் அடங்கிய ஒரு கூட்டு மருத்துவக் குழு உலகளவில் சிறந்த தரநிலைகளுடன் அதிநவீன சுவாசக் கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கிறது. மிகத் துல்லியமான, வலியற்ற மற்றும் இரத்தம் வராத எண்டோஸ்கோபி, பிளாஸ்மா அடிப்படையிலான மற்றும் கதிர்வீச்சு அதிர்வெண் சிகிச்சை வழிமுறைகளும் இதில் உள்ளடங்கும்.

# ஹிந்த் மஸ்தூர் சபாஈரோடு மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



ஈரோடு பிப் .22-
ஹிந்த் மஸ்தூர் சபா ஈரோடு மாவட்ட கவுன்சில் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் ஈரோட்டில் நடந்தது. மாவட்ட செயலாளர் ஜீவா சண்முகம் தலைமையில் நடந்த கூட்டத்தில் மாவட்ட தலைவர் செந்தில் குமார் வரவேற்றார். மாவட்ட செயல் தலைவர் குமாரசாமி முன்னிலை வகித்தார்.

இதில் எச் எம் எஸ் தமிழ் மாநில செயல் தலைவர் ராஜாமணி கலந்து கொண்டு மாவட்ட நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து பேசினார். இந்த கூட்டத்தில் எச் எம் எஸ் சேலம் மாநில செயலாளர் கணேசன் மாநில அமைப்பு செயலாளர் பாஸ்கர் மாநில துணைத்தலைவர் ரமணி மாநில சிறப்பு அழைப்பாளர் செல்வராஜ் மாநில துணைத்தலைவர் மனோகரன் மற்றும் மாவட்ட துணைத் தலைவர்கள் மின் வாரியம் அரவிந்த் குமார் ரெயில்வே கூட்செட் பழனிச்சாமி அமைப்பு சாரா சித்தன் சையத் முஸ்தபா மின் வாரியம் நல்லசிவம் ஆட்டோ மாரியப்பன் மற்றும் துணை செயலாளர்கள் அமைப்புச் செயலாளர்கள் மாவட்ட மகளிர் அணியினர் அமைப்பு செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் யுவராணி ஆயிஷா நன்றி கூறினார்.

# சிவகங்கையில் மருது சகோதரர்களின் சிலை திறப்பு விழா. காணொளி காட்சி மூலம் திறந்து வைத்த முதலமைச்சர்



சிவகங்கை:பிப்:22-
சிவகங்கை நகர் தொண்டி ரோட்டில் புதிதாக அமைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களான மருது சகோதரர்களின் முழு உருவச் சிலைகளை தமிழ்நாடு முதல்வர் மதுரையில் இருந்தவாறு காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்தச் சிலைகள் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் ரூ 106.9 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டது. நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தொழில்துறை அமைச்சர் டிஆர்பி. ராஜா, மாவட்ட ஆட்சியர் பொற்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசும்போது:

கடந்த 5 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு 130 நினைவு மண்டபங்கள் மற்றும் சிலைகளை அமைத்துள்ளது. ஆனால் கடந்த அதிமுக வின் 10 ஆண்டு கால ஆட்சியில் 30 நினைவு மண்டபங்களை மட்டுமே திறந்தனர் என்றார். தொடர்ந்து பேசிய தொழில்துறை அமைச்சர் டி ஆர் பி ராஜா பேசும்போது:

திராவிட மாடல் ஆட்சி 2.0 வில் சிவகங்கை மாவட்டத்திற்கு மிகப்பெரிய வளர்ச்சி காத்திருக்கிறது என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன், சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரைஆனந்த் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கே. நடுஅள்ளி மக்கள் தொடர்பு திட்ட முகாமில் ஆட்சியர் நல திட்ட உதவிகளை வழங்கினார்



தருமபுரி பிப். 22-
தருமபுரி தாலுக்கா கே. நடுஅள்ளி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்டம் முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில் வருவாய் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு 15 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டாக்கள் , 8 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல், 10 பயனாளிகளுக்கு ரூ.1.32 லட்சம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகள், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.36 லட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகைகள், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 11 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் மதிப்பில் நல திட்ட உதவிகள், கூட்டுறவு துறையின் மூலம் ஐந்து பயனாளிகளுக்கு ரூ.4.92 லட்சம் மதிப்பில் கடன் உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.31.950 மதிப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் என பல்வேறு துறையின் சார்பில் மொத்தம் 102 பயனாளிகளுக்கு ரூ.60.78 லட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இந்த முகாமில் உதவி ஆட்சியர் காயத்ரி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் சுப்பிரமணியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் அலுவலர் பண்டரிநாதன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன், தாசில்தார் சவுக்கத் அலி உள்பட தொடர்புடைய அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# நவீன ட்ரெய்லர் – டிரக் பாடி உற்பத்தி நிலையம் ஸ்ரீபெரும்புதூரில் தொடங்கிய 'ஸ்ட்ராக் ' நிறுவனம்




சென்னை, பிப் 22-
தெற்கு ஆசியாவின் முன்னணி ட்ரெய்லர் மற்றும் டிரக் பாடி உற்பத்தியாளர் நிறுவனங்களில் ஒன்றான "ஸ்ட்ராக் " நிறுவனம் சென்னையில் புதிய அதிநவீன உற்பத்தி நிலையத்தை தொடங்கியது. இந்த புதிய தொழிற்சாலை, வணிக வாகன பாடி கட்டுமானத் துறையில் 30 ஆண்டுகளாக நிறுவனம் மேற்கொண்டுவரும் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

புதியதாக தொடங்கப்பட்ட சென்னை தொழிற்சாலை 6.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் 3.5 ஏக்கர் உற்பத்தி பகுதியை கொண்டது. இங்கு மாதத்திற்கு 800க்கும் மேற்பட்ட யூனிட்கள் உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. இந்த நிறுவனம் மேம்பட்ட உள்கட்டமைப்பு, நவீன தானியங்கி அமைப்புகள் மற்றும் உலகத் தரத்திலான உற்பத்தி செயல்முறைகளுடன் அமைந்துள்ளது. இந்த வகையில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ஆலையாக இது திகழ்கிறது.

ஸடார்க் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.சி. பண்ட்வால் கூறும்போது, "இந்த புதிய தொழிற்சாலையின் மூலம், இந்தியாவில் ட்ரெய்லர் மற்றும் டிரக் பாடி உற்பத்தித் துறையின் தரநிலையை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தியுள்ளோம். ரோபோடிக் வெல்டிங் மற்றும் மேம்பட்ட தயாரிப்பு செயல்முறைகள் முதல் ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் தர மேலாண்மை அமைப்புகள் வரை, எந்தவித சமரசமும் இல்லாத பாதுகாப்பு, நீடித்த தன்மை மற்றும் பொறியியல் துல்லியத்துட உலகத் தரமான தயாரிப்புகளை உருவாக்கும் எங்கள் உறுதியை இந்த தொழிற்சாலை பிரதிபலிக்கிறது." என்றார்.

தொடக்க விழாவில்
டைம்லர் இந்தியா வணிக வாகனங்கள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான டோர்ஸ்டென் ஸ்சமிடட் பேசும்போது: ஸடார்க்" நிறுவனம் தங்களது நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்தே மதிப்புமிக்க கூட்டாளியாக இருந்து வருகிறது. கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக, டிப்பர் பாடி விநியோகத்தில் தரம், நேர்த்தியான வழங்கல் செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையில் அவர்கள் தொடர்ந்து சிறப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

பாரத் பென்ஸ் தனது ஹெவி டூட்டி டிரக் வரிசையின் மூலம் இந்தியாவின் கட்டுமான மற்றும் சுரங்கத் துறைகளில் முன்னணித் தலைமையைவலுப்படுத்தி வரும் நிலையில், தங்களது உற்பத்தி ஆலைக்கு அருகில் 'ஸ்டார்க் ' போன்ற உயர்தர நிறுவனம் இருப்பது முக்கியமான மூலோபாய நன்மையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

# தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் உலக தாய்மொழி உறுதிமொழி ஏற்பு




தஞ்சாவூர் பிப். 22-
தஞ்சாவூர்மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உலக தாய்மொழி உறுதிமொழி ஏற்பு நடைபெற்றது.

உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ் மொழியைப் போற்றிடும் வகையில் உலக தாய்மொழி நாளான பிப்ரவரி 21ஆம் தேதி முன்னிட்டு நம் தாய் மொழியின் சிறப்பை இளைய தலைமுறை யினர் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் உலக தாய்மொழி நாள் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது

அதன்படி அனைத்து அரசு அலுவலகங்கள் மாவட்ட கலெக்டர் அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உலக தாய்மொழி நாள் உறுதிமொழி அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியை அனைத்து அரசு அலுவலர்களும் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் ஏற்றுக்கொண்டனர்.

# கோவை காமராஜர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 36 வது ஆண்டு விழா



கோவை. பிப்:22-
கோவை மாவட்டம் டாடாபாத் அழகப்பா சாலையில் உள்ள காமராஜர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 36 வது ஆண்டு விழா நாடார் சங்கத் தலைவர் பாஸ்கரன் நாடார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சுந்தரராமன் கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் கேடயங்களை வழங்கினார். பொதுச் செயலாளர் விமலராகவன் நாடார் முன்னிலை வகித்தார்.உடன் பொருளாளர் ராஜமா ணிக்கம் ,ராதாகிருஷ்ணன்,வாசகன்,சந்தன பால்ராஜ், விஜயகுமார், சிலுவை முத்துக்குமார்,பால்ராஜ்,செந்தில் மற்றும் நாடார் சங்க உறுப்பினர்கள்,பள்ளி ஆசிரியர்கள்,பொதுமக்கள் என ஏராளமானோர் மனோகர் கலந்து கொண்டனர்.

# கர்நாடகாவில் சிவாஜி ஜெயந்தி பேரணியில் கல்வீச்சு: பாகல்கோட்டையில் 144 தடை உத்தரவு



பெங்களூரு, பிப்.22-
கர்நாடக மாநிலம் பாகல்கோட்டையில் சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணியில் இரு தரப்பினரிடையே கல்வீச்சு நடைபெற்றது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டத்தில் உள்ள நியூ டவுனில் நேற்று முன் தினம் இரவு சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணி நடைபெற்றது. கிலா காளி பகுதியில் உள்ள மசூதி அருகே பேரணி சென்றபோது மர்ம நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் கூட்டத்தில் வந்த இளைஞர்களும் கற்களை வீசியதால் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்தனர். இரு தரப்பினர் மீதும் லேசான தடியடி நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நியூ டவுன் பகுதியில் உள்ள இறைச்சி கடைகள் மீது சிலர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அங்கு சனிக்கிழமை இரவு 12 மணி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் கூறுகையில், “பாகல்கோட்டையில் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அசம்பாவித சம்பவத்துக்கு காரணமானவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். சிசிடிவி காட்சிகளின்படி 8 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகிறோம். சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

முதல்வர் சித்தராமையா கூறுகையில், “பாகல்கோட்டையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கர்நாடகாவில் மத ரீதியான மோதல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது” என்றார்.

# டெல்லி ஏஜ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்க புர்ஜ் கலீபாவில் ஜொலித்த மூவர்ண கொடி

துபாய், பிப்.22-
டெல்லி ஏஜ உச்சி மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. இந்த மாநாட்டில் பல நாடுகளும், பல தலைமை செயல் அதிகாரிகளும் (CÞæ) பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் நேற்றுமுன் தினம் 19ம் தேதி பிரதமர் மோடி உரையாற்றினார்.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலும், ஏஜ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் உலகின் மிகப்பெரிய கட்டிடமான புர்ஜ் கலீபாவில் இந்திய தேசியக் கொடியின் மூவர்ணம் மின்விளக்குகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

இதற்கு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் பாராட்டு தெரிவித்துள்ளது. "இந்தியா யுஏஇ இடையே உள்ள உறவை காட்டும் சக்திவாய்ந்த சின்னம் இது" என்று இந்திய தூதரகம் பெருமிதம் தெரிவித்துள்ளது.

புர்ஜ் கலீபா கட்டிடத்தில் மூவர்ண கொடி ஜொலிக்கும் படத்தை வெளியிட்டு 'இந்திய ஏஜ மாநாட்டை உலகின் மிக உயர்ந்த கட்டிடம் கொண்டாடுகிறது' என்ற படவிளக்கத்துடன் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது. இந்தப் படத்தைப் பார்த்து பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# சங்கரன்கோவிலில் சமுதாய வளைகாப்பு விழா கலெக்டர், எம்பி, எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில்.பிப்.22-
தென்காசி மாவட்டம். சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் அமைந்துள்ள ஏவிஆர்எம்வி மண்டபத்தில் வைத்து சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் தலைமை வகித்தார்.தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் பேசியதாவது,

தென்காசி மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் சார்பில் சங்கரன்கோவில், ஊரகம் (பொது) மேலநீலிதநல்லூர், குருவிகுளம் ஆகிய 4 வட்டாரங்களைச் சார்ந்த 400 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்று உள்ளது எனவும்,இவ்விழாவில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தட்டு.சேலை, குங்குமச்சிமிழ் மஞ்சள் கயிறு, வளையல், தேங்காய், வெற்றிலை,பாக்கு. வாழைப்பழம், கொய்யாபழம், நெல்லிக்காய், முருக்கு, அதிரசம் போன்ற சீதனப் பொருட்களும், ஐந்து வகை (சாம்பார் சாதம், தயிர் சாதம் தேங்காய் சாதம், புளியோதரை, சர்க்கரை பொங்கல்) கலவை சாதமும் வழங்கப்பட்டது என பேசினார்.இந்த நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன்,சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி உதவித் திட்ட அலுவலர்கள் நர்மதா, சுமதி, சுருதி, நகராட்சி கமிஷனர் பொ ரவிச்சந்திரன், பொறியாளர் இர்வின்ஜெயராஜ், தாசில்தார் பரமசிவம் மற்றும் அரசு அலுவலர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஓபிஎஸ் திமுக நல்லுறவு.. ஏன் இந்த முடிவு.,? திமுக அமைச்சரவையில் பங்களிப்பா..?
## விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனருமான முத்துக்குமார்



நாகர்கோவில். பிப்.22-
தமிழ்நாட்டின் மூன்று முறை முதலமைச்சராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். நான்கு ஆண்டுகளுக்கு மேலாக துணை முதலமைச்சராகவும் பதவி வகித்தவர். இது போக 2001 விருந்து இந் நாள் வரை 5 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். எதிர்கட்சி தலைவர், துணைதலைவர் என்றெல்லாம் இருந்தவர் ஓபிஎஸ்.

அவர் திமுக பக்கம் சாய்ந்து முதலமைச்சர் முக ஸ்டாலினினை சந்தித்து ஆதரவு கரம் நீட்டிய தோடு, ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சிசிறப்பு என்றும் தெரிவித்தது, அரசியல் தளத்தில் பேசும் பொருளாகி உள்ளது.

ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்து, அதிமுகவின் பொருளாளர், அதன் பின்னர் அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் என்று பெரும் பதவியை வைத்திருந்தவர்,

அதிமுகவிலிருந்து வெளியேற்றப் பட்ட ஓபிஎஸ் இனிமேலும் தனிக்கட்சி தொடங்காமல் இருக்கிறாரே, அவரை நம்பி சென்றவர்களின் வாழ்க்கை என்னவாகும் என்கிற கேள்வி பலருக்கும் எழும்பியது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தான் சட்டசபை வளாகத்தில் முதலமைச்சர் முக ஸ்டாலினை சந்தித்து தனது ஆதரவு கரங்களை உயர்த்தியிருக்கிறார். மேலும் வெளியே வந்த ஓபிஎஸ் பத்திரிகையாளர்கள் மத்தியிலும், முக ஸ்டாலினின் ஐந்து ஆண்டு கால ஆட்சி சிறப்பு என்று புகழ்ந்து தள்ளி விட்டார். போதாகுறைக்கு ஓபிஎஸ் ஆதரவு எம்எல்ஏயான உசிலம்பட்டி ஐயப்பனும் சட்டசபையிலேயே முகஸ்டாலினின் ஆட்சி பொற்கால ஆட்சி என்று சொல்லி திமுகவின் கவனத்தை தன் பக்கம் இழுத்துக் கொண்டார்.

ஏன் இந்த அரசியல்? எடப்பாடி பழனிசாமியை மட்டும் விழ்த்துவதற்காக இந்த அரசியலா? அல்லது வேறு காரணமும் இருக்கிறதா? என்றால் ஆம் என்றே சொல்ல வேண்டும்.

அதிமுக எடப்பாடி பழனிசாமியை மட்டும் வீழ்த்த இந்த முடிவை எடுக்க வில்லை. பாஜக, மற்றும் சசிகலா, தினகரன் போன்றோருக்கும் அதிரடி வைத்திருப்பதை கொடுப்பதை போன்றே ஓபிஎஸ் முடிவு அமைந்துள்ளது.

பாஜக தலைமையை ஓபிஎஸ் பெரிதும் நம்பியிருந்தார். அதிமுகவை மீட்டு பாஜக தலைமை தனக்கு தந்து விடும் என்று நினைத்தார். அது பொய்த்து போனது. சில இடங்களில் பாஜகவும் ஓபிஎஸை புறந்தள்ளிய சம்பவங்களும் நடந்தேறியுள்ளது. மேலும் தற்போதைய தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனும், அதிமுக எடப்பாடி பழனிசாமி பக்கமே நிற்பதும் தான் ஓபிஎஸ் முடிவை மாற்றுவதற்கு ஒரு காரணம் என்கிறது அரசியல் வட்டாரம்.

மேலும் சசிகலா, தினகரன் போன்றோரின் ஆதரவு தனது தலைமையை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு இல்லை. வயதும் 75 ஐ கடந்து விட்டது. இனிமேலும் தனிக்கட்சி தொடங்கி, வளர்தெடுத்து தனிப்பட்ட செலாவாக்கில் ஆட்சி அமைக்க முடியுமா? என்றால் அது இயலாத காரியம். எனவே தான் நன்றாக ஆலோசித்து தான் ஓபிஎஸ் இந்த முடிவை எடுத்திருக்கிறார். இது அதிரடியாக எடுத்த முடிவாக தெரியவில்லை. பல மாதங்கள், ஆண்டுகளாக யோசித்து எடுக்கப்பட்ட முடிவாக தான் தெரிகிறது.

இன்னும் சொல்லப்போனால், எடப்பாடி பழனிசாமியால் தான் அதிமுக வேஷ்டி கூட கட்ட முடியாமல் போய் விட்டதே என்கிற ஆதங்கமும் ஓபிஎஸ் யிடம் இருக்கத் தான் செய்கிறது.

திமுக நல்லுறவை ஓபிஎஸ் ஆதரவுகளும் ஏற்றுக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஓபிஎஸ் ஒரு முது பெரும் அரசியல் வாதி. 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் அனுபவம் கொண்டவர். அதிமுக தலைமை தனக்கு கிடைக்கவில்லை என்றதுமே அவர் முடிவை மாற்றிக் கொண்டார். தனி கட்சி தொடங்குவது போல் எந்த செயல்பாட்டையும், எப்போதும் காட்டியதில்லை. அவருக்கு நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தவர்கள் அவரவர் பிடித்த கட்சிகளுக்கு சென்றிருக்கிறார்கள். அதையும் ஓபிஎஸ் எதிர்க்க வில்லை. பிரிந்து சென்ற அனைவருக்குமே நல்வழி தான் காட்டியுள்ளார். அவரை நம்பியவர்கள் யாரும் கெட்டு போக வில்லை என்று தான் சொல்லுகிறார்கள்.

ஓபிஎஸ் திமுகவுடன் நல்லுறவு வைத்திருப்பது அதிமுகவுக்கு பெரிய சரிவை ஏற்படுத்தும் என்று சொல்லுகிறார்கள் அரசியல் கருத்தாளர்கள். அதுமட்டுமின்றி சசிகலா, தினகரன் போன்றோருக்கும் அரசியல் எட்டாக கனியாக தான் மாறக் கூடும் என்று தெரிகிறது.

ஓபிஎஸ் ஸின் தனிப்பட்ட செல்வாக்கை திமுக தான் புரிந்து வைத்துள்ளது. இராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் ஓபிஎஸ் சுயேட்சை வேட்பாளராக களம் கண்டார். அந்த தேர்தலில் 3.43 இலட்சத்திற்கும் மேலாக அதிக வாக்குகளை வாங்கி இரண்டாவது இடத்தை பெற்றிருந்தார். அதிமுக வேட்பாளர் ஒரு இலட்சம் வாக்குகள் கூட வாங்க வில்லை. ஓபிஎஸ் ஸுக்கு இன வாக்குகள் அதிகமாக இருப்பதாக திமுக நம்புகிறது. எனவே ஓபிஎஸ் திமுக பக்கம் வந்தால் அடுத்த அமைச்சரவையில் துரைமுருகன் இடத்தில் நிதியமைச்சராக வைத்து அழகு பார்த்தாலும் ஆச்சர்யப் படுவதற்கில்லை, என்கிற பேச்சும் உலா வருகிறது.

# புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனியில் கனமழை வாய்ப்பு

சென்னை, பிப்.22-
வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் நாளை (பிப்.22) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நாளை வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப்.23 முதல் 25ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 26, 27 தேதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மன்னார் வளைகுடா, அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தருமபுரியில் தற்காலிக ஒருங்கிணைந்த புளி வணிக மையம் மற்றும் வேளாண்மை பொருள் இ-வாடகை 2.0 செயலியை வேளாண்மை துறை அமைச்சர் பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்



தருமபுரி பிப். 22-
தருமபுரி மதிகோண் பாளையத்தில் உள்ள தருமபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடவளாகத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை துறை சார்பில் தற்காலிக ஒருங்கிணைந்த புளி வணிக மையம் மற்றும் வேளாண்மை பொருள் இ வாடகை 2.0 செயலியை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் ரூ.11.30 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த புளி வணிக மையம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார். அதன்படி தருமபுரி அருகே செல்லியம்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த புளி வணிக மையத்திற்கான கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தற்காலிக மாக மதிக்கோண் பாளையத்தில் உள்ள தருமபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடவளாகத்தில் ஒருங்கிணைந்த வணிக மையம் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு 7.5% பரிவர்த்தனை செலவு சேமிக்கப்படுவதுடன் 10,000 மேற்பட்ட விவசாய குடும்பங்கள் குறிப்பாக பெண்கள் பயன் பெறுவார்கள். விதையற்ற புளி கேக், புளி விழுது, இயற்கை புளி போன்ற மதிப்பேற்ற பொருட்களின் உற்பத்தி ஏற்றுமதி மேம்பாடு அடைவதால் அரசுக்கு ஆண்டுக்கு சுமார் 2 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். இந்த திட்டத்தின் மூலம் புளி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள், புளி ஏற்றுமதியாளர்கள், விவசாய தொழில் முனைவோர்கள் மற்றும் புளி சார்ந்த தொழில் மேற்கொண்டுள்ள உழவர் உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் பயனடைவார்கள் . இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி, தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி. பழனியப்பன், பென்னகரம் சட்டமன்ற உறுப்பினர் நி.ரி.மணி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தருமபுரி மாவட்ட புளி வணிகர்கள் நல சங்கத் தலைவர் பி. பாஸ்கர், செயலாளர் டி. என்.வி. வினுபாஜ்ராஜ், முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, இன்பசேகரன், தர்ம செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோகரன், வேடம்மாள், நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகரச் செயலாளர்கள் நாட்டான் மாது, கௌதம் மற்றும் புளி வணிகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.